செய்தி வெளியீடு எண்.566 நாள் 03–09–2007

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நெம்மேலியில் அமைந்துள்ள</u>

<u>கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமையவுள்ள இடத்தை பார்வையிட்டார்</u>

சென்னை நகரின் குடிநீர் தேவைக்கும், கிடைக்கும் அளவிற்கும் உள்ள இடைவெளியினைக் குறைத்து, குடிநீர் வழங்கும் அளவை அதிகரிப்பதற்காக தமிழ்நாடு அரசு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தினை வட சென்னைப் பகுதியில் மீஞ்சூரில் வடிவமைத்து இயக்கி மாற்றும் முறையில் அமைத்திட முடிவு செய்து அதன் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு நிலையத்தினை எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) முறையில் இந்திய அரசின் உதவி பெற்று தென் சென்னைப் பகுதியில் அமைத்திட இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள நெம்மேலி மற்றும் கிருஷ்ணன்காரணை கிராமத்தில் 40.05 ஏக்கர் பரப்பளவு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் தற்பொழுது இந்துசமய அறநிலையத் துறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான நிலமாகும்.

தமிழ்நாடு அரசு தனது அரசாணை (நிலை) எண்.238 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி 4–1) துறை நாள் 08.06.2007 மூலம் மேற்படி நிலத்தை சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ள நீண்ட கால குத்தகையாக 30 ஆண்டுகளுக்கு வழங்க இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது.

மேற்கூறிய நிலத்தினை ஆளவந்தார் அறக்கட்டளை 29.08.2007 அன்று சென்னைக் குடிநீர் வாரியத்திடம் ஒப்படைத்தது.

மேலும், மேற்படி இடத்தில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு சென்னைக் குடிநீர் வாரியத்தால் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. இந்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் மெகான் லிமிடெட் இதன் கூட்டு நிறுவனம் அடிகோ டெக்னாலிஜிஸ் லிமிடெட், சுவிஸ்சர்லாந்து தேர்வு செய்யப்பட்டது.

இந்நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இன்னும் 5 மாதங்களில் அதாவது இவ்வாண்டு இறுதிக்குள் விரிவான திட்ட அறிக்கையினை இந்நிறுவனம் சமர்ப்பிக்கும். இந்த விரிவான திட்ட

அறிக்கை மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு திட்டத்திற்கு தேவையான நிதியுதவி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் இன்று (3.09.2007) இத்திட்டத்திற்கு தேர்வு செய்த இடத்தையும், அங்கு நடைபெறும் நில அளவை, மண் பரிசோதனை மற்றும் கடல் படுகை ஆய்வு பணிகள் நடைபெறுவதையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. நா. ஆற்காடு வீராசாமி அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் மற்றும் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னைக் குடிநீர் வாரிய உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத் திட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட பணிகளை விரைவாக முடிக்குமாறு சென்னைக் குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**(என்.ஆர்.அரிக்குமார்)**

மக்கள் தொடர்பு மேலாளர்

**சென்னை குடிநீர் வாரியம்**

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

.

**Press Release No.566** **Dt.3.09.2007**

**HON'BLE CHIEF MINISTER OF TAMIL NADU INSPECTEDTED**

**THE DESALINATION PLANT AT NEMMELI**

**The Chennai Metropolitan Water Supply and Sewerage Board has proposed to set up a 100 MLD Sea Water Reverse Osmosis Plant at Minjur on Design built own operate and transfer basis (DBOOT) in order to bridge and gap between demand and supply of water and also to augment water supply to Chennai City and the works are under progress.**

**The Government also proposed to have another 100 MLD desalination plant on Reverse Osmosis method with financial assistance from the Government of India at Nemmeli Village near Mahabalipuram.**

**The land for setting up the Desalination Plant has been selected at Nemmeli Village, Thirukazhukundram Taluk, Kancheepuram District which belongs to Alavandar Trust and maintained by HR & CE Department. The Government (vide G.O.Ms.No.238 of 8.6.2007 issued by Tamil Development and HR & CE Department). The above land was handed over by Alawandar Trust to CMWSS Board on 29.08.2007.**

**For preparation of Detailed Project Report (DPR) for setting up a 100 MLD Desalination Plant, M/s Mecon Limited (a Government of India Enterprise) in technical association with M/s ADECO Technologies SA (ADECO), Switzerland have been selected as a Consultant and the Firm have commenced the work and the entire work have to be completed within 5 months i.e. before 31.12.2007. The DPR will be submitted to Government**

**of India for financial assistance and the work will be commenced immediately after getting the financial assistance.**

**Hon'ble Chief Minister of Tamil Nadu inspected the Desalination Plant site today ( 3.9.2007) and also review the ongoing works i.e. land survey, soil test and bethymetive survey at Nemmmeli.**

**Hon'ble Chief Minister of Tamil Nadu also advised the officials of Chennai Metropolitan Water Supply and Sewerage Board to speed up the process of Project implementation.**

**Hon'ble Minister for Rural Development and Local Administration Thiru M.K. Stalin, Hon'ble Minister for Energy Thiru Arcot N. Veerasamy, Hon'ble Minister for P.W.D. Thiru Duraimurugan, Thiru Shiv Das Meena, I.A.S., Managing Director, C.M.W.S.S.Board, Thiru Pradeep Yadev, I.A.S., Kancheepuram Collector and other officials accompanied Hon'ble Chief Minister of Tamil Nadu during the inspection.**

**(N.R. HARIKUMAR)**
**PUBLIC RELATIONS MANAGER**
Metro Water Board.

Issued by: DIPR, Chennai-9.